**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# The Lived Experiences of Subaltern Communities in the Poems of Kanyakumari District Poets

**Dr.S.Elamaran***,
Assistant Professor, Department of Tamil & Research Centre, Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari-629 802.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980.
*Correspondence: maranlpc@gmail.com.

**Article Info**
Received on 22-April-2026, Revised on 25-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

The poems of the poets of Kanyakumari District reflect the lives of the marginalized communities: the Vannars (washerfolk) who earn their livelihood by washing soiled clothes; the Navithars (barbers) who make a living by grooming and cutting hair; and the goldsmiths, whose existence and economic stability have been severely affected by urbanization and technological advancements. They also portray the lives of people who survive by tapping rubber trees, climbing coconut and palmyra trees, and harvesting paddy in the forests, hill tracts, agricultural fields, and villages at the foothills of the mountains. Furthermore, these poems depict the hardships endured by women working in brick kilns and represent the lives of other subaltern and working-class communities.These poems serve as a bridge between the land and its lived culture. They record the cultural transformations experienced by both the poets of the soil and the people themselves. The poems of Kanyakumari District vividly portray the struggles of the marginalized people, whose lives are shaped by debts, hopes, customs, and rituals. The poems of Thanupichchaiya, N. Sivakumar, T. Regith Kumar, and Benjamin not only powerfully articulate the cultural voice of the soil but also bring to light several cultural elements that have hitherto remained outside the mainstream and have not received central attention.

***KEYWORDS:*** *Rice Husk, Brick, Kiln, Rubber, Nature, Medicine, Harvest, Palm Jaggery Puffed Rice,Bran.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# குமரி மாவட்ட கவிஞர்களின் கவிதைகளில் அடித்தள மக்களின் வாழ்வியல்

***முனைவர் சு. இளமாறன்,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம்-629802. E-mail : maranlpc@gmail.com
https://orcid.org/0000-0002-7559-5980

**ஆய்வுச்சுருக்கம்:**

குமரி மாவட்டக் கவிஞர்களின் கவிதைகளில் அழுக்குத் துணிகளைத் துவைத்து வாழுகின்ற வண்ணார்களின் வாழ்க்கை, தலை முடியைச் சுத்தம் செய்கின்ற நாவிதர்களின் வாழ்க்கையும் நகர்புறமான வாழ்வின் தொழில் நுட்பத்தால் தன்னுடைய இருப்பு சிதைந்து பொருளாதாரம் இல்லாமல் நலிவடைகின்ற பொற்கொல்லரின் வாழ்க்கையும் காட்டிலும் மேட்டிலும் வயல்வெளிகளிலும் மலையடிவாரக் கிராமங்களிலும் ரப்பர் மரத்தில் பால்வெட்டியும், தென்னை மரம், பனைமரம் மற்றும் அறுவடைக் காலங்களில் நெல்லறுத்தும் வாழுகின்ற வாழ்க்கையினையும் செங்கல் சுள்ளையில் வேலை பார்க்கின்ற பெண்கள் படுகின்ற இன்னல்களையும் உடைய அடித்தள மக்களின் வாழ்க்கையும் பிரதிபலிப்பதாகக் கவிதைகள் உள்ளன. இவர்களின் கவிதைகள் மண்ணுக்கும் மண்ணின் வாழ்வியலுக்கும் பாலமாக விளங்குகின்றன.. பண்பாட்டு மாற்றத்தை மண்ணின் கவிஞர்களும் மக்களும் எதிர்கொண்டதை பதிவு செய்துள்ளனர். அடித்தள மக்களின் வாழ்க்கை கடன்களோடும் நம்பிக்கைகளோடும் சடங்குகளோடும் போராடுகின்ற வாழ்க்கையினை, குமரி மாவட்ட கவிஞர்களின் கவிதைகளில் காணமுடிகின்றன. தாணுபிச்சையா, நட. சிவகுமார், த.ரெஜித்குமார், பென்னியமின் ஆகியோரின் கவிதைகள் மண்ணின் பண்பாட்டுக்குரலை வலுவாகப் பேசுவது மட்டுமின்றி இதுவரையிலும் மையத்திற்கு வராத பண்பாட்டுக் கூறுகளை வெளிக்காட்டுகின்றன.

**திறவுச் சொற்கள் :** உமி, செங்கல், சுள்ளை, ரப்பர், இயற்கை, மருத்துவம், அறுவடை, கருப்பட்டி பொரி,தவிடு.

**முன்னுரை**

குமரி மாவட்ட கவிஞர்களின் கவிதைகள், அடித்தட்டு மக்களின் வாழ்வியலை உணர்த்தும் தன்மை கொண்டவையாகும். இக்கவிதைகள் ஒருவகைச் சமூகப் பிரதிபலிப்பு மட்டுமல்ல; அடித்தட்டு மக்களின் பொருளாதார-சுற்றுச்சூழல் நிலைத்தன்மையையும் வெளிக்காட்டுகின்றன. இக்கவிஞர்கள் சமூக ஒடுக்குமுறைக்குகளைத் தீவிரமாக கேள்வி கேட்கும் குரலில் எழுதினர். சமத்துவம், சுயமரியாதை, தொழில் இடர்பாடுகள், குடும்பங்களில் பெண்களின் இடம், குமரி நாட்டுப்புற சொற்கள் ஆகிய இலக்குகள் கவிதைத் தளத்தில் வெளிப்படுகின்றன. சமூக மக்களின் வாழ்க்கையில்

Copyright © Author(s), 

நடைபெறும் அவலங்களையும் வறுமைக்கோட்டையும், அவர்கள் ஒரு வேலை சாப்பாட்டுக்கு வழியின்றி போராடும் மக்களின் வாழ்க்கையையும் உண்மைச் சம்பவங்களையும் கவிதைகளில் பதிவிட்டுள்ளார்.குமரி மாவட்ட கவிஞர்களின் நவீனக் கவிதைப்போக்குகள் புதிய புதிய பாடுபொருள்களோடு பல நுண்ணிய பண்பாட்டுத் தளங்களையும் பாடுபொருளாகக் கொண்டிருக்கின்றன. கவிதையின் மொழி வட்டாரத் தன்மையோடு மண்ணின் மக்களை இலக்கிய நயத்தோடு சித்திரித்துள்ளனர். வயல்வேலைக்குச் செல்லும் வாழ்வு, தங்க நகை செய்கின்ற கைத்தொழில் வாழ்வு, துணி வெளுக்கின்ற மக்களுடைய வாழ்வு, செங்கல் சுள்ளையில் வேலை பார்க்கின்ற பெண்களின் வாழ்வு, பனைத் தொழில் செய்யும் மக்களின் வாழ்வு, ரப்பர் தொழிலோடு சம்மந்தப்பட்ட வாழ்வு, இயற்கை மருத்துவம் சார்ந்த வாழ்வு ஆகியவற்றை கட்டமைக்கப்பட்ட ஆதிக்க பண்பாட்டிற்கு எதிராகக், கலகப் பண்பாட்டுக் குரல்களில் அடித்தள மக்களின் வாழ்வியல் கூறுகளைப் பேசுகின்றன.

**விவசாயம் சார்ந்த கவிதைகள்**

"காட்டுக்குளத்தங்கரையில குளத்துக்கும் வயலுக்கும்/ வித்தியாசமே தெரியாம கெடக்கும் /வேலைக்கு ஆள் வைக்காம /அவரே மம்பட்டியால உழுது /மட்டப்படுத்தி /நாத்துநட்டு /உரமா சாணாங்கியிட்டு /களைப்பறிச்சி/ அறுத்து சுமந்து நெல்லெடுத்து/ வீட்டுல சேப்பாரு /அதுல விளையுற நெல்லுல தான் /வருசந்தோறும் புத்தரிசி சாப்பாடு." (த. ரெஜித்குமார்,ப.32)இந்தக் கவிதை அடித்தள மக்களின் வாழ்வியலைப் பேசுகிறது. உழைப்பாளியின் வலியைப் பேசுகிறது. "கதிர் அரிவாள் வெத்தலைப் பாக்கு / வைத்து வழிபடுவோம் / அப்பா மூணு நெற்கதிர், நாயுருவி, பலாயில / எடுத்து வீட்டின் முன் வாசல் / பின்வாசல் கன்னிமூலை / எனக் கட்டி தொங்க விடுவார் / கடந்த வருசம் கட்டியது வாசலில் தொங்கும் / இருந்தாலும் புதுசாய் கட்டுவார் / இதற்குப் பொறவுதான் / புது நெல்லரிசி சாப்பிடுவது வழக்கம் / வீடு நிறைத்தால் வீட்டில் / நெல் வந்து குவியும் / அப்பாவின் நம்பிக்கை."(த.ரெஜித்குமார்,ப.55) இயற்கை, இயற்கையோடு இணைந்த வாழ்க்கை தமிழர்களுடையதாகும். நெற்கதிர்களையெல்லாம் வீட்டிற்குக் கொண்டு வந்த உடன் அதை ஒரு கன்னி மூலையில் வைத்துவிட்டு கதிர், அரிவாள், வெத்திலை, பாக்கு ஆகியவை வைத்துக் கொண்டு முன் வாசலில் கட்டித் தொங்கவிடுவார்கள். இப்படி வீடு நிறைத்தால் நெல் வந்து குவியும் என்பது அப்பாவின் நம்பிக்கையாகும். இப்போது வீடு நெறைப்பு சடங்கு இல்லை குளித்த ஆறும் காணவில்லை ஏரிகளும் காணவில்லை எனக் கவிதை முடிகிறது. "வயலுக்கு அழைச்சிட்டு போய் / வயல பங்கு பிரிச்சி கொடுத்திட்டு / இவருக்க பங்கை அறுப்பாரு / ஒவ்வொருத்தரும் அறுத்தத அள்ளி / கட்டிச் சுமந்து களத்து பேட்டில சேக்கணும் / எல்லா கதிரும் வந்ததும் / அடிச்சு நெல்ல பிரிச்சி / நெல்ல சொளவால வீசி / சாவிநெல்ல தனியா ஒதுக்குவாங்க / அறுப்புக்குக் கூலியான நெல்ல / ஒவ்வொருத்தருக்கும் பிரிச்சி / கொடுத்திட்டு வருவாரு / அந்தக் கதிர் அரிவாள் / பரணில் தூங்குகிறது."(த.ரெஜித்குமார்,ப.59) இக்கவிதை உழைக்கும் மக்களின் வாழ்க்கையைச் சுட்டுகிறது. ஒரு காலத்தில் நிலம் இருந்தது. அதனை வெட்டித் திருத்தி கிளைத்து நாற்று நட்டு, களைபறித்து அறுவடை செய்தனர். தற்போது அந்த வயலைக் காணவில்லை. இந்தக் கவிதை வயலில் வேலை

செய்து உழைத்த மக்கள் இன்று உழைப்பு இன்றி வேறு வகையான வேலைகளுக்குச் செல்வதால் அறுவடைக்குப் பயன்பட்ட கதிர் அரிவாள் பரணியில் தூங்குகிறது. இந்த நிலை உழைக்கும் மக்களுக்கு வேதனை தருவதாக அமைகிறது.

**தங்க நகை செய்யும் தொழிலாளர்களின் நிலை**

"கரிந்த உமி /தீய்ந்த கரி /உடைந்த குகை /அறுந்த வடிநூல் /பழைய ரசச் சட்டியென/எல்லாவற்றுக்குள்ளும் /ஒட்டிக்கொண்டு இருப்பவற்றை /தேடித்திரட்டும் அரிப்புக்காரன் /பிரித்தெடுக்க முயல்கிறான் /ஒட்டிக்கொண்டிருக்கும் /எல்லாவற்றையும்"

(தாணுபிச்சையா,ப.42) எனும் தாணுபிச்சையாவின் கவிதைத் ஆசாரி சமூகத்தின் வாழ்வினைச் சித்திரிக்கிறது. சேதாரம் என்கின்ற கவிதை ஆசாரிகளின் வாழ்வியலோடு ஒரு உரையாடல் நடத்துகின்ற கவிதையாக இருக்கின்றது. இக்கவிதை சமூக வெளியில் தங்க நகை செய்கிற ஆசாரி குறித்து மிக்க வசதியான சித்திரமும் அதற்கு நேர் எதிரான வாழ்வியலைச் சித்திரிக்கிறது. "நள்ளிரவில் /மீண்டும் கேட்கக் கேட்க /நடுக்கமாயிருக்கிறது /கொற்கை அரசவாள் /ரத்தம் பெருகவெட்டியெறிந்த /ஆயிரம் பொற்கொல்லர் தலைகளின் /பேரோலம்"(தாணுபிச்சையா,ப.25) இந்தக் கவிதை பாண்டிய அரச ஆதிக்க வன்முறையால், ஆயிரம் பொற்கொல்லர்களின் தலைகள் வெட்டப்பட்டு பழிவாங்கப்பட்ட கொடூரம் இரவு தோறும் கேட்கும் போர் ஓலமாகப் பதிவு செய்கிறது.

சமூகம் என்பது ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு விதமான வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் பெற்றிருக்கிறது. ஆட்சி அதிகாரம் யாருடைய கையில் இருந்ததோ அவர்களுடைய ஆதிக்க மனநிலைக்குத் தகுந்தாற்போல் பல்வேறு சமூகங்கள் பழிவாங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு காலக்கட்டத்திலும் உழைப்பை மையப்படுத்தி வாழ்ந்த சமூக மக்கள் எழுச்சியும் வீழ்ச்சியும் அடைந்தனர். பொற்கொல்லருடைய தவறுதான் கோவலனுடைய கொலைக்குக் காரணமாகும். ஆனால் இந்தக் கவிதையினுடைய பின்னணி ஆயிரம் பொற்கொல்லர்களின் தலைகள் வெட்டப்பட்ட ஒரு வரலாற்றைப் பேசுகிறது. "எங்கேனும் ஓடிச்சென்று /எச்சில் இலைகளைப்பொறுக்கி /உயிர் பிழைத்தாலும்/ நான் ஒரு போதும் /தின்னமாட்டேனென /இப்போது /உறுதிசொல்ல முடியாது /எனது சொக்காரன்மார் /மிச்சம் வைத்த சயனைடுகளை" (தாணுபிச்சையா, ப.69) இன்றைய உலகமயமாக்கல், சிறுதொழிலாளியை மிகப்பெரிய அளவில் பாதித்திருக்கிறது. பெரிய வணிகக் கடைகள், விற்பனை நிறுவனங்கள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் இவையெல்லாம் வந்த பிறகு சிறுதொழிலாளி மிகவும் பாதிக்கப்படுகிறான். நவீனத் தொழில் நுட்பம் உருக்கொண்ட பிறகு கைவினைத் தொழில் முறை நலிந்து இயந்திரத்தால் நகை செய்கின்ற முறை வந்த பிறகு சிறுதொழிலாளிகளின் வாழ்வு கேள்விக்குள்ளானது. அதனைத் தாணுபிச்சையா தங்கநகை ஆசாரியின் பின்புலத்திலிருந்து கவிதையாக்கியுள்ளார்.

**பனைத் தொழில் செய்யும் மக்களின் நிலை**

"அறுவடைகாலம்/அறுத்து வாரச்சில் தொளியும் நெற்கதிர்கள்/அப்பாவோடு கடவத்தில் பொறுக்கிய படியே/இப்படியேதான்./பலரும்/பொறுக்கியெடுத்த கதிர்மணி/வீட்டில்/அவல்

பொரிக்காரியிடம்/ஒருபக்கா நெல் கொடுத்து/அம்மா/ஒண்ணரைக் பக்கா கருப்பட்டி பொரி வாங்குவா/இரவெல்லாம்/வாய்கள் சுவைத்த/பொரியின் வாசம்"
(த.ரெஜித்குமார்,ப.22) இந்தக் கவிதைக்குள் அந்த காலத்தினுடைய எளிமையான வாழ்க்கை புதைந்து கிடக்கிறது. அவல் பொரியல் கருப்பட்டியைப் போட்டு இனிப்பாக்கிய உடம்புக்குக் கெடுதல் இல்லாத உணவு சுவைத்த நிகழ்வினைச் சுட்டுகிறது. அறுவடையும் போது நெல் வயல்களில் உதிரும் நெற்களைச் சேகரித்து, வீட்டில் ஒரு பக்கா நெல்கொடுத்து ஒன்றரை பக்கா கருப்பட்டி பொரி வாங்குவார்கள். "ஊருஊரா போய்/மரைக்காலில் அளந்து/வாங்கிட்டு வந்த நெல்ல அவிச்சி/ரோட்டுல காயவச்சி/சாக்கில கட்டி வைப்பா அம்மா. /நாங்க தலையில நெல்ல சுமந்த படியே/ரைஸ்மில்லுக்கு/நெல்லை அரிசியாக்கி/வெலைக்குக் கொடுப்பா அம்மா/அரைக்கச்சில/உமியை அள்ளுறது எங்கவேலை/அள்ளிய உமியைச் சாக்கில கட்டி/வீட்டில கொண்டு போட/அக்கா அரிப்பில அரிச்சி/தவிட்டையும் உமியையும்/தனியா எடுப்பா" (த.ரெஜித்குமார்,ப.35) இந்தக் கவிதை மரக்காலில் வாங்கி வந்த நெல்லை ரோட்டில் காயவச்சு சாக்குல கட்டி ரைஸ்மில்லுக்குக் கொண்டு அரைத்து, அள்ளிய உமியைச் கோணிப்பையில் கட்டி வீட்டிற்கு எடுத்து செல்வார்கள். பிறகு தவிட்டையும் உமியையும் தனித்தனியாகப் பிரித்து தவிட்டையும் கருப்பட்டியையும் கலந்து உருட்டித்தின்பார்கள். அதன் பிறகு மீதி உள்ள தவிட்டை மீன்கடைக்கு எடுத்துக் கொண்டு போய் விற்று அந்தப்பணத்துல சாள மீனு வாங்கியதை இக்கவிதை காட்சிப்படுத்துகிறது. "காலங்காத்தால/அருவா பெட்டி/சுண்ணாம்புப் பெட்டி /கலக்கு மட்டை/மிருக்குத் தடி/நெஞ்சுவார்/திளாப்பு/இடிக்கி/கலையம்"(த.ரெஜித்குமார்,ப.12)இக்கவிதை பனைத் தொழில் சார்ந்த அடித்தள மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.

**செங்கல் சுள்ளைத் தொழில் நிலை**

"செங்கச் சுள்ளையில / புரட்சி செய்தவ / கோமதி தான் / ஆம்பளைக்குச் சமமா / மொதல்ல கல்லறுத்தவ / கல்யாணம் முடிஞ்சி எப்போம் / வில்லுக்குறி வந்தாளோ / அப்பத்திலயிருந்து / சுள்ளப் பெரைதான் கதியாச்சி / கல்லடுக்குவது / கல்லறுப்பது / கல்வைப்பது / மண் உருட்டுவது / மண் வெட்டி தொளி மிதிப்பதுன்னு / எல்லா வேலையும் அத்துப்படி / இதலெல்லாம் / காமமிருகங்களின் / கையில சிக்கித்தவறி படிச்சதுதான்" (த.ரெஜித்குமார்,ப.78)செங்கல் சுள்ளைத் தொழில், கட்டிடத் தொழில்கள் ஆகியவற்றில் பெண்களை உதவியாளராக ஈடுபடுகின்றனர். உடல் உழைப்பு சார்ந்து எந்தத் தொழிலாக இருந்தாலும் ஆண் பெண் எனப் பேதமில்லாமல் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனால் கூலி என்று வரும்போது பெண்களுக்குப் பாதி கூலியும் ஆண்களுக்கு முழுக் கூலியுமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இது சுரண்டல் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கிறது. கட்டிடத் தொழில் ஈடுபடும் பெண் சித்தாள்களின் வாழ்க்கை, பாலியல் சீண்டல்கள், சமூகம் அவர்களைப் பார்க்கின்ற பார்வை, அவமானப்படுத்தப்படுதல், சுயத்தைச் சீண்டுதல் போன்றவற்றை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

**துணி வெளுப்பு தொழில் நிலை**

சமூகத்தில் கீழ்நிலையில் ஊரிலுள்ள அழுக்கைச் சுத்தப்படுத்துகின்ற புரத வண்ணாரின் வாழ்வியலை நட.சிவகுமார் என்னும் கவிஞர் பதிவுசெய்கிறார். புரத வண்ணார்களை அடிமைகளாக, இழிவானவர்களாகக் கருதுகிறது. வெள்ளாவி அடுப்போடு மல்லுகட்டக்கூடிய வாழ்க்கை எளிதான வாழ்க்கையல்ல. "இப்படி சொல்லிக்கிட்டிருந்த அம்மாக்கிட்ட /எல்லாம் சரிதான் /தொரைக்குத் துணி வெளுத்ததில்ல /அப்படி என்ன பெருமையின்று கேட்டேன் /போல மரமண்ட பயல தீண்ட வண்ணாலும் /நமக்கும் வித்தியாசம் இருக்குல" (நட. சிவகுமார், ப.83) ஒடுக்கப்பட்ட சமூகத்தின் வாழ்க்கை வலிகளாலும் வேதனைகளாலும் நிறைந்தது. வண்ணார் என்ற அடையாளம் ஒற்றைத் தன்மை கொண்டதல்ல. வாழ்விடங்களுக்கு ஏற்ப யாருக்குத் துணி துவைக்கிறார்கள் என்ற சாதிய அடிப்படையில் பல படி நிலைகளைக் கொண்டுள்ளது.

**ரப்பர் தொழில் நிலை**

"டெம்பிளேட்டால் அளவு பிடிச்சு /கொறண்டியால் கான் வடிச்சு/பால்வெட்டு கத்தியால்/பால்வெட்டும் அப்பாவிற்கு/மார்ச் மாத சீசன் லீவில் தான் ஆசுவாசம் /ஒண்ணரை ரூபாய் சம்பளம் அன்னைக்கு/அப்பா சொல்வாங்க…" (பென்னியமின், ப.14) இந்தக் கவிதை ரப்பர் மரத்தில் வேலை செய்கின்றவனின் வாழ்க்கையைப் பேசுகிறது. ரப்பர் மரக்காடுகளில் கூலி வேலை செய்கின்றவர்களின் வாழ்க்கை மிகவும் கடினமான வாழ்க்கையாகும். மழைக்காலங்களில் பால் வெட்டுவது,தினக்கூலிகாரனுக்குச் சவாலான வாழ்க்கையாகும். அதிகமான மழைபெய்தால் பால் வெட்ட முடியாது. அன்றாட வாழ்க்கை கேள்விக்குறியாகி விடும். சில நாட்கள் டீ குடிக்கக் கூட பணம் இருக்காது. இந்த நிலையைச் சரிசெய்ய கொத்த வேலைக்கு செல்கின்றனர் எனக் கவிதை பேசுகிறது.

**இயற்கை மருத்துவம்**

"சின்ன பிராயத்தில / தலைவலின்னா வீட்டுப்பக்கத்தில / கிடக்குற கரிசிலாங்கண்ணி நொச்சியிலைய / பறிச்சி ஆவிபிடிப்பா அம்மா. / கண்வலிக்கு / தாய்பால் இரவல் வாங்குவா. / சளிபிடிச்சா தும்பைச்சாறு / பிழிஞ்சி தடவுவா. / பல்வலிக்குச் சுக்கை / அரைச்சி கன்னத்துல பூசுவா. / காது வலின்னா / வெத்திலைச் சாறை விடுவா. / சொறி சிரங்கா / குப்பமேனிய அரைச்சி / உடம்பு பூரா பூசி விடுவா. / வெப்புக்குத் (வேர்க்குரு) / தேங்காய் தண்ணிய ஊத்துவா. / உடம்புல சின்னதா கட்டிக்குச் / சீலாந்தி (பூவரசு) மரப்பட்டைய / பொடிச்சி கட்டுவா. / புண் வந்தா / வல்லாரைக் கீரையை அரைச்சி பூசுவா. / எதிர்பாராம கத்திப்பட்டா / முருங்கயிலையும் சுண்ணாம்பும் / சேர்த்து கசக்கி வைப்பா / காய்ச்சலுக்குத் துளசி இலையோடு / தேனும் தருவா / எல்லாம் ரெண்டு மூணு / நாளையில் குணமாகிவிடும் / நேத்தைக்குச் / சின்ன பொண்ணுக்குப் / பீச்சலுக்கு / டாக்டருக்கிட்ட காட்டிட்டுயிருக்கேன்." ( த. ரெஜித்குமார், ப.87) இக்கவிதை நாட்டார் மரபில் உள்ள இயற்கை வைத்தியம், பாட்டி வைத்தியம் ஆகியவற்றை இன்றைய தொழில் நுட்ப அறிவு காலி செய்துவிட்டதைப் பேசுகிறது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கூறி இயற்கையோடு இணைந்த வாழ்க்கை பண்பாடு காணமால் போனதைப் பேசுகிறது. "நீலம் பாரித்த உடலோடு / நினைவற்ற நிலையில் / வாயில் நுரைத்தள்ளலுடன் / காட்டடிவார கந்தக பூமியை நோக்கி பயணம் / பாதையெங்கும் பாம்புகள் / வழியில் வெள்ளம் பெருக்கெடுத்த காட்டாறு தாண்டி / கண்மணியை

தூக்கிக் கொண்டு / குடும்பத்தோடு / கேசவ நேரி ஊருக்கு வந்தாச்சு / அந்த மலையடிவாரத்தில் / அதிகாலையில் / பனையோலை குடிலில் / பாம்பாட்டிச் சித்தர் கீரிப்பிள்ளை வேலுவை கண்டோம்." (நட. சிவகுமார், தம்பிராட்டியின் பரியங்கம், ப.89) என்ற கவிதை நாட்டார் மக்களின் வைத்தியம் சார்ந்த நம்பிக்கையை விளக்குகிறது. "இந்திர கோபப்பூச்சி/குழியானை மின்மினிப்பூச்சி சுழல்வண்டு/ஓரிலை தாமரை /பூவன்குறத்தி பச்சிலை/கோழிமுட்டை அம்புலி/கூடவே அரிதாரமும ரசமும்/சிறுநீர் விட்டு கொதிக்க வைத்து. . . /சுற்றி சுற்றி வருகிறாள்" (நட. சிவகுமார், வெட்டிமுறிப்புக் களம், ப.60).இந்தக் கவிதை ஒரு பெண்ணை வசியம் செய்வது குறித்துப் பேசுகிறது. "பொன்குரண்டி செபியிலான கோட்டை/பொரியாநங்கை கைகள்/கையாந்தரை கால்கள்/வேலிபருத்தியிலான ரோமங்கள் /மருதம்பட்டை கவசத்தோடு/நீலகொடுவேலி தலையோடுமான/மூலிகை மனிதன்/மூலிகைக்கு காப்பு கட்டி/மூலிகைகள் படர்ந்தன" (நட. சிவகுமார், வெட்டிமுறிப்புக் களம், ப.35) இக்கவிதை, நவீன தொழில் நுட்பத்தால் இயந்திர மனிதனை உருவாக்கியதைப் போல மூலிகை மனிதனை உருவாக்கியிருக்க வேண்டும் என்று வேடிக்கையாகச் சொல்கிறது.

**முடிவுரை**

கவிதை என்பது எதார்த்தத்தை மேலோட்டமாக பிரதிபலிக்கின்ற வடிவம் இல்லை. உழைக்கும் மக்களுக்களின் வலியையும் வேதனையையும் எதார்த்தமாக பதிவுசெய்யும் இலக்கிய வடிவமாகும். தாணுபிச்சையா, நட. சிவகுமார், த.ரெஜித்குமார், பென்னியமின் ஆகியோரின் கவிதைகள் அதிகாரத்திற்கும் மையத்திற்கும் வராத அடித்தள மக்களைப் பல்வேறு கோணங்களில் கவிநயத்துடன் எடுத்துரைக்கின்றன. குமரி மாவட்ட கவிஞர்களின் கவிதைகளில் வயலில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை, துணி வெளுப்பு, செங்கல் சூளை, பனை சார்ந்த தொழில், ரப்பர் சார்ந்த தொழில், மூலிகைச் சார்ந்த வைத்தியத் தொழில் வாழ்க்கை ஆகிவற்றை காட்சிப்படுத்துகின்றன.

**Reference:**

[1]. Sivakumar, N. Uvarman. Nagercoil: Kumari Pathippagam, 1997.

[2]. Sivakumar, N. Vettimurippuk Kalam. Nagercoil: Kalakattam Publications, 2007.

[3]. Sivakumar, N. Thampurattiyin Pariyangam. Thuckalay: Vaasi Pathippagam, 2017.

[4]. Thanupichchaiya. Uraimezhugin Manjaadip Pon. Nagercoil: Thinai Veliyeettagam, 2009.

[5]. Benjamin. Moongil Theppam. Nagercoil: Thendral Publications, 2009.

[6]. Regith Kumar, T. Sengal Sullai. Thuckalay: Vaasi Pathippagam, 2019.